**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>**

**<u>வேலூர் மாவட்டம்</u>**

# தேசிய நெடுஞ்சாலை சட்டம்-1956-ன் கீழ் நிலஎடுப்பினை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்த கையேடு



**மாவட்ட வருவாய் நிர்வாகம்**
**வேலூர்.**

2020

இந்த ஆவணத்தை
பதிவிறக்கம் செய்ய:

ந.க.**G2**/29772/2018 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாள்:26.02.2020 வேலூர்.

# சுற்றறிக்கை

பொருள் : நிலஎடுப்பு - வேலூர் மாவட்டம் - தேசிய நெடுஞ்சாலைகள் நிலஎடுப்புச் சட்டம் 1956 – நிலஎடுப்பு பணிகளின் போது ஏற்படும் தேவையற்ற காலதாமதம் மற்றும் குறைகளை சரிசெய்யும் பொருட்டு நிலஎடுப்பு நடைமுறைகளை தெளிவுபடுத்தும் வகையில் சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக.

---------------

வேலூர் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் நிலஎடுப்புச் சட்டம் 1956-ன் கீழ் பல்வேறு நிலஎடுப்பு பணிகள் அனைத்து வட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிலஎடுப்பு பணிகளின் போது நிலஎடுப்பு புலன்கள் தொடர்பான நிலத்திட்ட அட்டவணையை (LPS) இறுதி செய்வதிலும், நிலஎடுப்பு தொடர்பான முதல்கட்ட அறிக்கையினை வெளியிடுவதிலும், அரசுக்கு இறுதி நிலஎடுப்பு அறிக்கையினை அனுப்புவதிலும் நிலஎடுப்பு புலன்கள் தொடர்பாகவும் மற்றும் புலத்தில் உள்ள மரங்கள் மற்றும் கட்டிடம் தொடர்பாகவும் பல்வேறு குறைகள் / பிழைகள்/விடுபாடுகள் ஏற்படுவதால் நிலஎடுப்பு நடைமுறைகளில் தேவையற்ற காலதாமதங்களும் திருத்திய அறிவிக்கைகள் வெளியிடும் நேர்வுகளும் ஏற்பட்டு வருகின்றன. எனவே அவற்றை களையும் விதமாகவும், நிலஎடுப்பு தொடர்பான அறிவிக்கைகள் வெளியிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய இனங்கள் தொடர்பாகவும் சார்நிலை அலுவலர்களுக்கு தெளிவினை ஏற்படுத்தும் பொருட்டு நிலஎடுப்பு இனங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து கீழ்கண்டவாறு அறிவுரைகள் வெளியிடப்படுகிறது.

**தேசிய நெடுஞ்சாலை சட்டம் 1956-ன் கீழ் நிலஎடுப்பு செய்யப்படும் இனங்களில் இடம்பெறும் படிநிலைகள்** :-

| | |
|---|---|
| 1. | நிலஎடுப்பு செய்யப்பட உள்ள கிராமம் மற்றும் நில எடுப்பு அலுவலரின் விவரம் மத்திய அரசிதழில் வெளியிடல் |
| 2. | நிலத்திட்ட அட்டவணையை கேட்புத் துறையினரிடமிருந்து பெறுதல் (Land Plan Schedule) |
| 3. | நிலத்திட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு புலங்களை சரிபார்த்து உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்தல். |

| | |
|---|---|
| 4. | மத்திய அரசிதழில் நிலஎடுப்பு செய்யப்பட உள்ள புலங்கள் தொடர்பான 3(A)(1) அறிவிக்கை வெளியிடுதல் |
| 5. | நாளிதழ்களில் நிலஎடுப்பு செய்யப்பட உள்ள புலங்கள் தொடர்பான 3(A)(3) அறிவிக்கை வெளியிடுதல் |
| 6. | நிலஉரிமையாளர்களிடமிருந்து நிலஎடுப்பு தொடர்பான ஆட்சேபனைகள் பெற்று கேட்புத் துறையினரின் கருத்தின் அடிப்படையில் அவற்றின் மீது ஆணைகள் பிறப்பித்து நிலஉரிமையாளர்களுக்கு சார்வு செய்தல். |
| 7. | பிரிவு 3(D)(1)-ன் கீழ் அறிவிக்கை மத்திய அரசிதழில் வெளியிடுதல் |
| 8. | நிலஎடுப்பு புலங்களுக்கான நிலமதிப்பு, மரமதிப்பு மற்றும் கட்டிட மதிப்பு நிர்ணயம் செய்தல் |
| 9. | நிலஉரிமையாளர்களுக்கு பிரிவு 3(G)(3)-விசாரணைக்கான அறிவிக்கையினை நாளிதழ்களில் வெளியிடுதல். |
| 10. | நிலஉரிமையாளர்களுடன் பிரிவு 3(G)(3)-ன் கீழ் விசாரணை நடத்தி இழப்பீட்டுத் தொகையினை தெரிவித்தல் |
| 11. | பிரிவு 3(H)(1)-ன் கீழ் மண்டல அலுவலரிடமிருந்து முன்மொழிவு தீர்ப்பாணைக்கான ஒப்புதல் பெறுதல். |
| 12. | பிரிவு 3(H)(2)-ன் கீழ் இறுதித் தீர்ப்பாணை பிறப்பித்தல் |
| 13. | நிலஉரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல். |
| 14. | 3(G)(3)-விசாரணைக்கு ஆஜராகாத நிலஉரிமையாளர்களுக்கு பிரிவு 3(E)(1)-ன் கீழ் அறிவிக்கை வழங்கி 60-நாட்களுக்குள் நிலத்தை ஒப்படைக்கக் கோருதல். |
| 15. | நிலத்தை ஒப்படைக்காத நிலஉரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் பிரிவு 3(E)(2)-ன் கீழ் ஆணை பிறப்பித்து நிலத்தை கையகப்படுத்துதல். |

**பிரிவு 3(a)(1):-**

தேசிய நெடுஞ்சாலை நில எடுப்பு சட்டத்தின் படி நில எடுப்பு செய்யப்படவுள்ள கிராமத்தின் பெயர் மற்றும் நில எடுப்பு செய்யப்படவுள்ள தகுதிவாய்ந்த அலுவலர் பெயர் (Competent Authority for Land Acquisition - CALA) ஆகியவை பிரிவு 3(a)(1) ன்படி மத்திய அரசிதழில் வெளியிடப்படும்.

1) **நிலத்திட்ட அட்டவணை பெறுதல்:-**

- நில எடுப்பு தொடர்பான நிலத்திட்ட அட்டவணை(LPS)(4 பிரதிகளில்) கேட்புத்துறையினரிடம் இருந்து நிலஎடுப்பு அலுவலர் பெற வேண்டும்.
- சம்பந்தப்பட்ட நில எடுப்பு அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் அந்நிலஎடுப்பு பகுதியின் எல்லைக்குட்பட்ட வட்டாட்சியருக்கு நிலத்திட்ட அட்டவணை சரிப்பார்ப்பு பணிக்கு அனுப்பப்படும்.

**2) நிலத்திட்ட அட்டவணை சரிபார்த்தல்:**

- நில எடுப்பு துறையினரிடமிருந்து நிலத்திட்ட அட்டவணை வரப்பெற்றதும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், குறுவட்ட அளவர், கேட்புத்துறையின் உதவிப்பொறியாளர் நிலைக்கு குறையாத அலுவலர் ஆகியோருடன் நில எடுப்பு புலங்களை நேரடி புலத்தணிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**புலத்தணிக்கை மேற்கொள்ளும் போது கவனிக்கப்பட வேண்டியவை:**

| | |
|---|---|
| புல எண்கள் | நிலத்திட்ட அட்டவணையில் உள்ள புலஎண்கள் புலத்தணிக்கையில் போது உள்ள புல எண்களுடன் ஒத்துள்ளதா என்பதை ஒத்திசைவு செய்து கொள்ள வேண்டும். |
| விஸ்தீரணம் | புலத்தணிக்கையின் போது நிலத்திட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நில எடுப்பு விஸ்தீரணம் மற்றும் புலத்தில் உள்ள விஸ்தீரணத்துடன் ஒத்திசைவு செய்து கொள்ள வேண்டும் |

**3.பிரிவு-3(A)(1) அறிவிக்கை தயாரித்தல்:-**

- நிலஎடுப்பு புல எண்கள் நிலஎடுப்பு விஸ்தீரணம் ஆகியவை சரியான அளவில் குறிப்பிட்டு பிரிவு-3(A)(1) அறிவிக்கை ஆங்கிலத்தில் தயார் செய்திட வேண்டும்.
- அடுத்து வெளியிடப்படும் 3(D)(1) அறிவிக்கையில் புதிய புல எண்களை சேர்க்கவோ அல்லது அதன் விஸ்தீரணம் 3(A)(1)-ல் குறிப்பிடப்பட்டதை விட அதிகரிக்கவோ இயலாது. அதனை 3(A)(1) அறிவிக்கையை தயாரிப்பதற்கு முன்பு கருத்தில் கொள்ள வேண்டும்.
- 3(A)(1) அறிவிக்கையில் புல எண், வகைபாடு, நிலஎடுப்பு விஸ்தீரணம், அரசு/பட்டா நிலம் ஆகியவை மட்டும் குறிப்பிடப்பட வேண்டும்.
- இவ்வாறு தயார் செய்யப்பட்ட அறிவிக்கை, கீழ்கண்ட ஆவணங்களுடன் (மூன்று பிரதிகளில்) வட்டாட்சியர் ⟶ வருவாய் கோட்ட அலுவலர் ⟶ நில எடுப்பு அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் சமர்ப்பிக்க வேண்டும்.
    - நில எடுப்பு புலங்களின் சிட்டா நகல்
    - நில எடுப்பு புலங்களின் "அ" பதிவேடு நகல்
    - நில எடுப்பு புலங்களின் அடங்கல் நகல்
    - நில எடுப்பு புலங்களின் புல வரைபடம்
    - நிலஎடுப்பு புலங்களின் உட்பிரிவு அட்டவணை
    - கூட்டுகண்ணோக்கு வரைபடம்
    - 3(A)(1) அறிவிக்கை
- 3(A)(1) அறிவிக்கையினை Bhoomirashi Portal-என்ற இணையதளத்தில் CALA- Login மூலம் உள்ளீடு செய்து மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.

**4. பிரிவு 3(A)3 செய்திதாள்களில் பிரசுரம் செய்தல்:-**

- 3(A)(1) அரசிதழ் அறிவிக்கை வெளியான பின்பு அதனை ஆங்கிலம் மற்றும் தமிழில் இரு தனித்தனி செய்தித்தாள்களில் வெளியிடப்பட வேண்டும்.
- இவ்வறிக்கையினை பின்வரும் அலுவலகங்களில் விளம்பரம் செய்து சம்பந்தப்பட்ட அலுவலரிமிருந்து விளம்பர சான்று பெற்றிட வேண்டும்.
    - வட்டாட்சியர் அலுவலகம்,

- ❖ சார்பதிவாளர் அலுவலகம்,
- ❖ வருவாய் ஆய்வாளர் அலுவலகம்,
- ❖ கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,
- ❖ வட்டார வளர்ச்சி அலுவலகம்,
- ❖ ஊராட்சி மன்ற அலுவலகம்

- ➢ நிலஉரிமையாளர்கள் 3(A)(3) அறிவிக்கை செய்தித்தாள்களில் பிரசுரம் ஆன நாளிலிருந்து 21 நாட்களுக்குள் நிலஎடுப்பு தொடர்பான ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் நிலஎடுப்பு அலுவலரிடம் எடுத்து மூலமாக தெரிவிக்கலாம்.

<u>பிரிவு **3(C)(1)-ன்** கீழான நிலஎடுப்பு ஆட்சேபனைகள் :-</u>

- ➢ நிலஉரிமையாளர்களிடமிருந்து நிலஎடுப்பு தொடர்பான ஆட்சேபனைகளை பிரிவு 3(C)(1)-ன் கீழ் பெறப்பட வேண்டும்.
- ➢ நிலஉரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகளுக்கு சம்மந்தப்பட்ட துறையினரின் கருத்தினை பெற்று பிரிவு 3(C)(2)-ன் கீழ் நிலஎடுப்பு அலுவலர் அவற்றிற்குரிய செயல்முறை ஆணை பிறப்பித்தல்.
- ➢ நிலஉரிமையாளர்களுக்கு மேற்படி செயல்முறை ஆணையினை சார்வு செய்யப்பட வேண்டும்.

<u>பிரிவு **3(D)(1)-ன்** அறிவிக்கை தயார் செய்தல்:-</u>

- ➢ <u>பிரிவு 3(A)(1)-ன்</u> அறிவிக்கை வெளியிட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் <u>பிரிவு 3(D)(1)-ன்</u> அறிவிக்கை வெளியிட வேண்டும். ஒரு வருடத்திற்குள் 3(D)(1) அறிவிக்கை வெளியிடப்படவில்லை எனில் <u>பிரிவு 3(A)(1)-ன் கீழான</u> அறிவிக்கை காலாவதியாகிவிடும்.
- ➢ நிலஎடுப்பு அலுவலர் நேரடி புலத்தணிக்கை செய்து நிலஎடுப்பு புலங்களில் உள்ள மரங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றினை கணக்கீடு செய்து நிலஉரிமையாளர்களின் பெயருடன் அறிவிக்கை தயார் செய்யப்பட வேண்டும்.
- ➢ <u>பிரிவு 3(A)(1)-ன்</u> அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்ட புலஎண்கள் மற்றும் பரப்புகளை நேரடி புலத்தணிக்கை செய்து நிலஎடுப்பிற்கு தேவைப்படும் புலஎண்கள் மற்றும் பரப்பு, நிலஎடுப்பு புலங்களில் உள்ள மரங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை சரிபார்த்து நிலஉரிமையாளர்களின் பெயர் மற்றும் பட்டா எண் ஆகியவற்றை கொண்டு 3(D)(1) அறிவிக்கையினை தயார் செய்ய வேண்டும்.
- ➢ 3(D)(1) – அறிவிக்கையுடன் இணைக்கப்பட வேண்டியவை
    1) 3(A)(1) அறிவிக்கை மற்றும் 3(D)(1) அறிவிக்கை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை காட்டும் Variation Certificate
    2) புலத்தணிக்கைக் குறிப்புகள் அடங்கிய அறிக்கை
    3) கட்டுமானங்களின் விவரங்களை உள்ளடக்கிய அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவை தயார் செய்யப்பட வேண்டும்.

- Bhoomirashi Portal - என்ற இணையதளத்தில் CALA- Login மூலம் 3(D)(1) அறிவிக்கையினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும். அவ்வாறு 3(D)(1) அறிவிக்கை வெளியிட்டவுடன் பிரிவு 3(D)(2)-ன் கீழ் நிலஎடுப்பு நிலங்கள் அனைத்தும் அரசின் வசம் கொண்டு வரப்பட்டதாக கருதப்படும்.

**கூடுதல் 3(A)(1) அறிவிக்கை வெளியிடும் நேர்வுகள்:**

| | |
|---|---|
| 3(A)(1)– அறிவிக்கையில் உள்ள புல எண்களை விட கூடுதல் புல எண்கள் 3(D)(1)-ல் இடம் பெற வேண்டுமாயின் | புதிய புல எண்களுக்கு மட்டும் கூடுதலாக புதிய 3(A)(1) அறிவிக்கை வெளியிட வேண்டும். |
| 3(A)(1)– அறிவிக்கையில் உள்ள பரப்பினை விட கூடுதல் பரப்பு 3(D)(1)-ல் இடம் பெற வேண்டுமாயின் | புதிய பரப்பளவிற்கு மட்டும் அப்புல எண்களை உள்ளடக்கி கூடுதலாக புதிய 3(A)(1) அறிவிக்கை வெளியிட வேண்டும். |
| 3(A)(1) – அறிவிக்கையில் உள்ள புலத்தின் வகைப்பாடு 3(D)(1)-ல் அறிவிக்கையில் மாறுபடுமாயின் | வகைப்பாடு மாறுபடும் புல எண்ணுக்கு மட்டும் கூடுதலாக புதிய 3(A)(1) அறிவிக்கை வெளியிட வேண்டும். |
| 3(A)(1)– அறிவிக்கையில் உள்ள புல எண் மற்றும் பரப்பு ஆகியவற்றை விட 3(D)(1)-ல் இடம் பெறும் புல எண் மற்றும் பரப்பு குறைவாக இருக்குமாயின் | திருத்திய 3(A)(1) அறிவிக்கை வெளியிட அவசியமில்லை. |

8) **மேற்படி படிநிலைகளில் தவிர்க்கப்பட வேண்டிய தவறுகள்:**

1. நிலத்திட்ட அட்டவணையினை ஒத்திசைவு செய்யாமல் 3(A)(1) அறிவிக்கை தயார் செய்தல்.
2. உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்யாமல் 3(A)(1) அறிவிக்கை தயார் செய்தல்
3. 3(A)(1) அறிவிக்கை தயார் செய்யும் போது நாளது தேதியில் கிராம கணக்குகளில் உள்ள புல எண்கள் மற்றும் உட்பிரிவுகளில் பிழையுடனோ அல்லது விடுபட்டோ அறிக்கை தயார் செய்தல்.
4. 3(D)(1) அறிவிக்கை தயார் செய்யும் போது நிலஎடுப்பு புலங்களில் உள்ள கட்டுமானங்கள், மரங்கள், நிலத்திற்கு அடியில் உள்ள பி.வி.சி பைப்புகள், நிலத்தடி தொட்டிகள், கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் ஆகியவற்றினை கணக்கிடாமல் அறிவிக்கை தயார் செய்தல்
5. 3(A)(1) அறிவிக்கைக்கு பின்னர் நில எடுப்பு புலங்களை வட்ட அலுவலகங்களில் உட்பிரிவு செய்தல், பட்டாமாற்றம் செய்தல்
6. நில உரிமையாளர்களின் ஆட்சேபணை மனுக்கள் மீதான இறுதி ஆணையினை நில உரிமையாளர்களுக்கு சார்வு செய்யாமல் இருத்தல்

9) **நிலமதிப்பு நிர்ணயம் செய்தல்:**

**நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதற்கான உரிமை விதிகள் 2017**

- நில எடுப்பு பணிகளை மேற்கொள்ளும் போது, நிலமதிப்பு நிர்ணய கருத்துரு தயார் செய்வதற்கு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதற்கான உரிமை விதிகள் 2017ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.
- இதன்படி, நில நிர்ணய மதிப்பு கருத்துரு தயார் செய்யும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழ்கண்டவாறு.

**<u>வழிகாட்டி மதிப்பு:</u>**

- நிலஎடுப்பு தொடர்பான 3(A)(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று நிலம் கையகப்படுத்தவுள்ள புலங்களின் அரசு வழிகாட்டி மதிப்பினை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலரிடமிருந்து எழுத்து பூர்வமாக பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இணையதளத்திலும் அவற்றின் மதிப்புகளை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இரண்டு வகையான மதிப்புகளுக்குமிடையே வேறுபாடுகள் எவையேனும் இருப்பின், அதுகுறித்து மாவட்ட பதிவாளர் அவர்களிடமிருந்து தெளிவுரை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- கையகப்படுத்தப்பட்ட புலங்கள் எத்தனை வகையான வழிகாட்டி மதிப்பினை கொண்டு இருக்கிறதோ அத்தனை குழுக்கள் (GROUP) அமைக்கப்பட வேண்டும்.

**<u>கூட்டுக்கண்ணோக்கு வரைபடம்:</u>**

- நிலஎடுப்பு செய்யவிருக்கும் கிராமத்தில், நிலஎடுப்பு புலத்தின் மையப்புள்ளியிலிருந்து 1.6 கி.மீ. சுற்றளவிற்குள் கவரப்படும் அருகாமையில் உள்ள அனைத்து கிராம வரைபடங்களையும் தொகுத்து ஒருங்கிணைந்த கிராம வரைபடம் தயார் செய்யப்படல் வேண்டும்.
- பிரிவு 3(A)(1)- அறிவிக்கை அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்ட நாளுக்கு முந்தைய 3 ஆண்டு காலத்திற்குள் 1.6 கி.மீ. சுற்றளவிற்குள் கவரப்படும் அனைத்து கிராமங்களில் நடைபெற்ற விற்பனை புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட சார்பதிவாளரிடம் இருந்து பெறப்பட வேண்டும்
- இதனைத்தொடர்ந்து, நிலஎடுப்பு புலன்கள் அமையப்பெற்றுள்ள கிராமத்தில் நடைபெற்ற விற்பனை புள்ளி விவரங்கள் மற்றும் அருகாமையில் உள்ள கிராமங்களில் 1.6 கி.மீக்குள் நடைபெற்ற விற்பனை புள்ளி விவரங்கள் ஆகியவற்றினை மட்டும் கிராம வரைப்படத்தில் பதியப்பட வேண்டும்.

**விற்பனை விவர பதிவேடு:**

- விற்பனை விவரங்களில் இடம்பெற்றுள்ள புலங்களுக்கு உரிய வழிகாட்டி மதிப்பினை சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து தவறாமல் எழுத்து பூர்வமாக பெற்றுக் கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட புலங்களுக்கு வழிகாட்டி மதிப்பு இல்லாத நேர்வுகளில் (GLV Not Available) சம்மந்தப்பட்ட மாவட்ட பதிவாளர் மூலமாக அவற்றிற்குரிய வழிகாட்டி மதிப்பினை நிர்ணயம் செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
- மேற்கண்ட விற்பனை புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை தட்டச்சு செய்து இணைப்பு-1ல் கண்டுள்ளவாறு விற்பனைப்புள்ளி விவர பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். இந்த பட்டியலில், 1.6-கி.மீ.க்கு அப்பால் நடைபெற்ற விற்பனைகள் **FAR AWAY FROM THE NEAREST VICINITY AREA** என்று குறிப்பிட்டு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேலும், 1.6-கி.மீக்குள் கவரப்படும் விற்பனைகள் **WITHIN THE NEAREST VICINITY AREA** என்று குறிப்பிடவேண்டும்.
- மேற்கண்ட பணிகள் நிறைவு பெற்றபின் நிலஎடுப்பு புலன்கள் வாரியாக நிலமதிப்பு நிர்ணயம் செய்ய கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**ANNEXURE -I தயார் செய்தல்:**

1) விற்பனைப்புள்ளி விவரப்பட்டியலில், Within the nearest Vicinity area என்று குறிப்பிட்டுள்ள விற்பனை புள்ளி விவரங்கள் மட்டும் உள்ளடக்கி **ANNEXURE -I** தயார் செய்யப்பட வேண்டும்.
2) இந்த பட்டியலில், நிலஎடுப்பு செய்யப்படும் புலன்களில் வழிகாட்டி மதிப்பிற்கு இணையான வழிகாட்டி மதிப்பு கொண்டுள்ள விற்பனை இனங்களை மட்டும் தேர்வு செய்து குறிப்பு கலத்தில் (Remarks) அந்த விற்பனைகளை மட்டும் Taken for consideration என குறிப்பிட்டு, **ANNEXURE-II** –க்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.
3) இந்த பட்டியலில், குறிப்பு கலத்தில் (Remarks) கூட்டுப்புலங்களாக விற்பனை செய்யப்பட்டவை, நில எடுப்பு புலங்களின் வழிகாட்டி மதிப்பினை சாராதவை, கட்டிடங்களுடன் கூடிய நிலங்களாக விற்பனை செய்யப்பட்டவை ஆகியவற்றை கண்டறிந்து தள்ளுபடி(Discard) என குறிப்பிட வேண்டும்.

**ANNEXURE -II தயார் செய்தல்:**

- Annexure I-ல், பதியப்பட்டுள்ள விற்பனை இனங்களில், Taken For Consideration என குறிப்பிட்டு அப்புலங்களின் வழிகாட்டி மதிப்பு நிலஎடுப்பு புலங்களின் வழிக்காட்டி மதிப்புடன் இணையாக உள்ளவற்றிற்கு மட்டும் Group வாரியாக ஒருங்கிணைத்து Annexure-II தயார் செய்யப்பட வேண்டும்.
- இது ஒவ்வொரு Group-க்கும் தனித்தனியாக தயார் செய்யப்பட வேண்டும்.
- அவ்வாறு தயாரிக்கப்பட்ட Annexure-II–ல் இடம் பெற்றுள்ள இனங்களிலிருந்து நிலஎடுப்பு புலங்களின் வழிகாட்டி மதிப்பில் 125% வரை விற்பனை நடைபெற்றுள்ள இனங்களை மட்டும் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொண்டு அவற்றிற்கு மட்டும் குறிப்பு கலத்தில் **Selected for Average Sale Value** என குறிப்பிட்டு Annexure – III க்கு கொண்டு செல்லவேண்டும். பிற இனங்களை பொறுத்தவரை விற்பனை மதிப்பினை பொறுத்து **Sale price is too High / Low - Hence Discarded** என குறிப்பிட வேண்டும்.

**ANNEXURE -III தயார் செய்தல்:**

- Annexure – III ல் பதியப்பட்டுள்ள விற்பனை இனங்களை விற்பனை மதிப்பின் இறங்கு வரிசை முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு வரிசைபடுத்தப்பட்டுள்ள விற்பனைகளில் மேலிருந்து கீழாக 50 சதவீத விற்பனை மதிப்புகளை கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அவ்வாறு கணக்கிடப்பட்ட விற்பனைகளின் விற்பனை மதிப்பின் கூட்டுத்தொகையினை அவற்றின் விற்பனை விஸ்தீரணத்தின் கூட்டுத்தொகையினால் வகுத்தால் கிடைப்பதே அந்த Group-க்குரிய நில மதிப்புத் தொகையாகும்.
- **Annexure-II**-ல் **Selected for Average Sale Value- NIL** எனில், வழிகாட்டி மதிப்பினையே நில மதிப்பாக நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்ட முறையின் அடிப்படையில் நிலஎடுப்பு செய்யப்படும் புலங்களுள் ஒரு குறிப்பிட்ட Group-க்குள் (ஒரே வழிகாட்டி மதிப்பு கொண்ட நிலஎடுப்பு புலங்கள்) அமையும் புலங்களுக்கு நிலமதிப்புத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

குறிப்பு :

- ❖ நிலஎடுப்பு புலங்களில் உள்ள மரங்களுக்கு சம்மந்தப்பட்ட தோட்டக்கலைத் துறை, வேளாண்துறை மற்றும் வனத்துறையினரிடமிருந்து மரமதிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ❖ கட்டுமானங்களைப் பொறுத்தவரையில் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ❖ கிணறுகள் / ஆழ்துளை கிணறுகளுக்கான மதிப்பினை வேளாண் பொறியியல் / பொதுப்பணித் துறையினரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இறுதி இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை:-**

1. நிலமதிப்பு:

- ➢ மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிலஎடுப்பு புலங்களுக்குரிய Group-வாரியாக நிலமதிப்பினை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.

2. பெருக்கல் காரணி:

- ➢ நிலஎடுப்பு செய்யப்படவுள்ள கிராமம் நகர்ப்புற (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி) எல்லையில் இருந்து உள்ள தொலைவின் அடிப்படையில் கீழ்கண்டவாறு பெருக்கல்காரணி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நகர்ப்புற எல்லையில் இருந்து உள்ள தொலைவு | பெருக்கல் காரணி |
|---|---|---|
| 1. | மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி எல்லைக்குள் இருப்பின் | 1.0 |
| 2. | 30 கி.மீ க்குள் | 1.25 |
| 3. | 30 கி.மீ க்கு மேல் 50 கி.மீ க்குள் | 1.5 |
| 4. | 50 கி.மீக்கு மேல் | 2 |

100% ஆறுதல் தொகை (Solatium):

- ❖ பெருக்கல் காரணி கொண்டு நிர்ணயம் செய்யப்படும் நிலமதிப்பு மற்றும் நிலஎடுப்பு புலங்களில் உள்ள கட்டிட மதிப்பு, மர மதிப்பு ஆகியவற்றின் கூட்டுத் தொகையே 100% ஆறுதல் தொகையாகும்.

**கூடுதல் நில மதிப்பு (Additional Market Value)**

- 3(A)(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து, தீர்ப்பாணை வெளியிடப்படும் நாள் வரை நிலமதிப்பிற்கு மட்டும் (பெருக்கல் காரணி தவிர்த்து)(மரம் மதிப்பு மற்றும் கட்டுமான மதிப்பு தவிர) (**Basic Land Value and not the land value calculated after considering Multiplication Factor)** 12% கூடுதல் நிலமதிப்பு தரப்பட வேண்டும்.

**இறுதி இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்தல்:**

ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் நிலஎடுப்பு செய்யப்படும் புலங்களுக்கு இறுதி இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யும் போது நிலஎடுப்பு செய்யும் புலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலமதிப்புடன் அதற்குரிய பெருக்கல் காரணியை கொண்டு கணக்கிடப்பட்ட மதிப்பு, மரமதிப்பு, கட்டிட மதிப்பு, 100% ஆறுதல் தொகை, 12% கூடுதல் நிலமதிப்பு ஆகியவற்றின் கூட்டுத் தொகையே அப்புலங்களுக்குரிய இறுதி இழப்பீட்டுத் தொகையாகும்.

**எ.கா:**

நகர்ப்புற எல்லையிலிருந்து 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு கிராமத்தின் நிலஎடுப்பு செய்ய 3(A)(1) அறிவிக்கை வெளியிடப்பட்டு 320 நாட்கள் கழித்து தீர்ப்பாணை வெளியிடப்படும் நிலையில், நிலஎடுப்பு செய்யப்பட உள்ள புலங்களின்,

அடிப்படை நிலமதிப்பு= A
மரமதிப்பு = B
கட்டிட மதிப்பு = C எனில்

**அவற்றிற்குரிய இறுதி இழப்பீட்டுத் தொகை கணக்கீட்டு விவரம் பின்வருமாறு :-**

| | | |
|---|---|---|
| 1. | Annexure-I, II, III – ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்பு | A |
| 2. | பெருக்கல் காரணியுடன் கூடிய நில மதிப்பு 1,00,000X1.25 (நில எடுப்பு புலம் நகர்ப்புற எல்லையிலிருந்து 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது) | 1.25 X A = D |
| 3. | கட்டுமானங்களின் மதிப்பு | B |
| 4. | மரங்களின் மதிப்பு | C |
| 5. | மொத்தம் (2+3+4) | D+B+C = E |
| 6. | 100% ஆறுதல் தொகை (கலம் 5-ல் உள்ள தொகைக்கு) | E |
| 7. | 12% கூடுதல் நிலமதிப்பு AX(12/100)X(320/365) | F |
| 8. | மொத்தம் (நில மதிப்பு) (கலம் 5+6+7) | E+E+F = 2E+F |

**பிரிவு 3(G)(3) அறிவிக்கை :-**

- பிரிவு 3(G)(1) ன் கீழ் நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட பின் பிரிவு 3(G)(3)ன் கீழ் தீர்வ விசாரணை (Award Enquiry) அறிவிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.
- இந்த அறிவிக்கையில் விசாரணை நடைபெறும் நாள், இடம் மற்றும் நேரம் ஆகியவை குறிப்பிட வேண்டும்.
- இந்த அறிவிக்கையினை பிரிவு 3(D)(1) அறிவிக்கையில் உள்ள நிலஉரிமையாளர்கள் அனைவருக்கும் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக சார்வு செய்ய வேண்டும்.

**பிரிவு 3(G)(4) தீர்வ விசாரணை :-**

- விசாரணையின் போது நிலஉரிமையாளர்களுக்கு நிலஎடுப்பு புலன்களுக்கு நிர்ணயிக்கப்படுள்ள நிலமதிப்பு மற்றும் மரங்கள், கட்டிடங்கள் விவரம் ஆகியவை குறித்து தெரிவிக்கப்படும்.
- பிரிவு 3(G)(4)ன் கீழான விசாரணையில் நிலஉரிமை தொடர்பான கீழ்கண்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்.
    - நிலப்பட்டா நகல்
    - நிலம் தொடர்புடைய ஆவணங்கள், வில்லங்கச் சான்று
    - ஆதார் அட்டை நகல்
    - வங்கி கணக்கு புத்தக நகல், பான் அட்டை

**முன்மொழிவு தீர்ப்பாணை 3(H)(1) (Draft Award):-**

- புல எண் வாரியாக ஒவ்வொரு நிலஉரிமையாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்பட்டு முன்மொழிவு தீர்ப்பாணை தயார் செய்யப்பட வேண்டும்.
- இத்தீர்ப்பாணையானது சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் மூலமாக மண்டல அலுவலருக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் கோரப்படும்.

**நில எடுப்பு அலுவலரால் இறுதி தீர்ப்பாணை வெளியிடப்படுதல் 3(H)(2) (Final Award)**

முன்மொழிவு தீர்ப்பாணைக்கு ஒப்புதல் வரப்பெற்ற பின்னர் இறுதி தீர்ப்பாணை நிலஎடுப்பு அலுவலரால் பகரப்படும்.

**நேர்வு 1:-**

- நிலஎடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை பெற ஒப்புதல் தெரிவிக்கும் நிலஉரிமையாளர்களுக்கு மேற்படி தொகை அவர்களின் வங்கி கணக்கில் ECS மூலமாக வரவு வைக்கப்படும்.

**<u>நேர்வு 2:-</u>**

- நிலஎடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை ஏற்க மறுத்து உயர்த்திய இழப்பீட்டுத் தொகை கோரும் நிலஉரிமையாளர்கள் நிலஎடுப்பு அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக் கொண்டு நடுவர் தீர்ப்பாயத்தில் (Arbitration) மூன்றாண்டுகளுக்குள் மனு செய்து உயர்த்திய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக் கொள்ளலாம்.

**<u>நேர்வு 3:-</u>**

- மேற்படி தீர்வம் விசாரணையில் பங்கேற்காத நிலஉரிமையாளர்களுக்கு நிலஎடுப்பு அலுவலரால் பிரிவு 3(E)(1) அறிவிக்கை சார்வு செய்து 60 தினங்களுக்குள் நிலஎடுப்பு புலங்களை கேட்புத் துறையினரிடம் ஒப்படைக்குமாறு பணிக்கலாம்.
- <u>பிரிவு **3(E)(2)**</u>- பிரிவு 3(E)(1)-ன் அடிப்படையில் நிலஎடுப்பு புலங்களை நிலஉரிமையாளர்கள் அரசின் வசம் ஒப்படைக்காதபட்சத்தில் மாவட்ட ஆட்சியர் பிரிவு 3(E)(2)-ன் கீழ் நிலத்தை கையகப்படுத்த நிலஎடுப்பு அலுவலருக்கு உத்திரவிடுவார்.
- மேற்படி நிலஉரிமையாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகை அரசு கணக்கில் நீதிமனறத்தில் வைப்பீடு செய்யப்படும்.

**<u>கிராம கணக்குகளில் மாற்றம் செய்தல்:-</u>**

- நிலஎடுப்பு செய்யப்பட்ட பட்டா நிலங்களை நெடுஞ்சாலைத் துறையின் பெயருக்கு கிராம கணக்கில் மாற்றும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்ட அலுவலக பட்டா உதவியாளரின் தமிழ்நில வலைதள முகவரியில் பதிவு செய்து குறுவட்ட அளவர், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் வழியாக வருவாய் கோட்டாட்சியரால் இணைய வழி கிராம கணக்குகளில் அ-பதிவேடு மற்றும் சிட்டாவில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

- எப்.எம்.பி வரைபடத்தில் நிலஅளவர் மூலம் உட்பிரிவுகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

எனவே, தேசிய நெடுஞ்சாலை நிலஎடுப்புச் சட்டம் 1956-ன் கீழ் நிலஎடுப்பு செய்யப்பட உள்ள இனங்களுக்கு மேற்படி அறிவுரைகளை பின்பற்றி நடைமுறை பிறழ்வுகள் ஏதும் இன்றியும், அறிவிக்கைகளை தயார் செய்யும் போது குறைபாடுகள் ஏதுமின்றியும் நிலஎடுப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து வருவாய் சார்நிலை அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர்

இணைப்பு : தொடர்புடைய சுற்றறிக்கைகள் /
அரசாணைகள்.

பெறுநர்
வருவாய் கோட்டாட்சியர், வேலூர், குடியாத்த்ம்
அனைத்து வட்டாட்சியர்கள், வேலூர் மாவட்டம்.
அனைத்து துணை வட்டாட்சியர்கள், வேலூர் மாவட்டம்.
அனைத்து வருவாய் சார்நிலை அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

உபரி - ஜி3 இருக்கைக்கு.

**[TO BE PUBLISHED IN THE GAZETTE OF INDIA, EXTRAORDINARY PART-II, SECTION 3, SUB SECTION (ii) ]**

**GOVERNMENT OF INDIA**
**MINISTRY OF ROAD TRANSPORT AND HIGHWAYS**
**(Department of Road Transport and Highways)**

## NOTIFICATION

**NEW DELHI, Dated the 2016.**

**SO (E)** In exercise of the powers conferred by sub-section (1) of section 3A of National Highways Act 1956 (48 of 1956) (herein after referred to as "the said Act"), the Central Government, after being satisfied that for the public purpose the land, brief description of which is given in the Schedule below, is required for building (four-laning etc), maintenance, management and operation of proposed , in the stretch of land from **(Design Chainage K.M.164.500 to Design Chainage K.M.218.280)** in the district of Vellore in the state of Tamilnadu here by declares its intention to acquire such land for the above said purpose.

Any person interested in the said lands, may, within twenty one (21) days from the date of publication of this Notification, in the Official Gazette object to the use of the land for the aforesaid purpose; under section (1) of section of 3C of the said Act;

Every such objection shall be made to the Competent Authority, namely, the District Revenue Officer, Vellore, Tamil Nadu in writing, and shall set out the grounds thereof and the Competent Authority shall give the objector an opportunity of being heard, either in person, or through a Legal Practitioner and may after hearing all such objections and after making such further enquiry, if any, as the Competent Authority thinks necessary, by order, either allow or disallow the objections;

Any order made by the Competent Authority under sub section (2) of Section 3C of the said Act shall be final.

The land plans and other details of lands covered under this notification are available and can be inspected by the interested person at the office of the Competent Authority.

**District Revenue Officer,**
**Vellore-09**

# SCHEDULE

Brief description of the land to be acquired with or without structure falling with in the stretch of lands **(from Design Chainage K.M.164.500 to Design Chainage K.M.218.280)** of building(four-laning etc),maintenance, management and operation of proposed , in the District of Vellore in the State of Tamil Nadu.

| Sl. No. | Name of the District | Name of the Taluk | Name of the Village | Survey Nos. | Type of land | Nature of land | Area in Sq.Mtrs. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | | | | |

**District Revenue Officer,**
**Vellore-09**

**GOVERNMENT OF INDIA**

**MINISTRY OF ROAD TRANSPORT AND HIGHWAYS NOTIFICATION**

**NEW DELHI**

**Rc.G4/** **Dated: .**

S.O.633(E) –In exercise of powers conferred by sub-section (1) of section 3A of the National Highways Act,1956(48 of1956) (here in after referred to as the said act), published in the Gazette No.544 under Part II section 3 sub-section(ii) dated: 01.03.2016, at the Central Government, after being satisfied that for the public purpose the land, the brief description of which is given in the schedule below, is required for building (widening / four – laning etc.,) maintenance, management and operation in the stretch of land from **(KM.164/500 to 218/280 K.M)**– in Village, Taluk in the District of Vellore in the state of Tamil Nadu, hereby declares its intention to acquire such lands.

Any person interested in the said lands, may, within twenty one (21) days from the date of publication of this Notification, in the Official Gazette object to the use of the land for the aforesaid purpose; under section (1) of section of 3C of the said Act;

Every such objection shall be made to the Competent Authority, namely, the District Revenue Officer, Vellore, Tamil Nadu in writing, and shall set out the grounds thereof and the Competent Authority shall give the objector an opportunity of being heard, either in person, or through a Legal Practitioner and may after hearing all such objections and after making such further enquiry, if any, as the Competent Authority thinks necessary, by order, either allow or disallow the objections;

Any order made by the Competent Authority under sub section (2) of Section 3C of the said Act shall be final.

The land plans and other details of lands covered under this notification are available in_______________office which is functioning in Sathuvachari and can be inspected by the interested person at office time.

Competent Authority &
District Revenue Officer,
Vellore – 09.

## SCHEDULE

Brief description of the land to be acquired with or without structure falling with in the stretch of lands **(from Design Chainage K.M.164.500 to Design Chainage K.M.218.280)** of building maintenance, management and operation of proposed _______________, in the District of Vellore in the State of Tamil Nadu.

| DISTRICT: | | | TALUK: | |
|---|---|---|---|---|
| Sl. No. | Survey No. Sub-Division No. | Type of the land | Nature of the land | Extent in Sq.Mtrs |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** |
| | | | | |

Competent Authority &
District Revenue Officer,
Vellore – 09.

**இந்திய அரசு**

**சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், புதுடெல்லி**

**அறிவிக்கை**

நக.ஜி4/21/2015 நாள்: .04.2016

1956 ஆம் வருடத்திய தேசிய நெடுஞ்சாலை சட்டம் பிரிவு 3ஏ துணைப்பிரிவு 3-ன் கீழான அறிவிக்கை ( 48/1956).

கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதும், வேலூா் மாவட்டம் வட்டம், கிராமத்தில் அமைந்துள்ளதுமான நிலங்கள் 1956ம் வருடத்திய தேசிய நெடுஞ்சாலை சட்டம் (48/1956) பிரிவு 3ஏ(1)ன்படி பிறப்பிக்கப்பட்டதும் 01.03.2016 நாளிட்ட மத்திய அரசிதழ் எண்.544, எஸ்.ஓ.எண்.633(ஈ), பாகம்-II, பிரிவு 3(ii)ல் வெளியிடப்பட்டுள்ளதுமான அறிவிப்புக்கிணங்க ஒரு பொதுக் காரியத்திற்கு அதாவது தேசிய நெடுஞ்சாலை எண் 46ல் ________________ பாதை அமைக்கும் பணிக்கு, தேசிய நெடுஞ்சாலை அமைத்தல், பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் இயக்குதல் ஆகியவைகளுக்காக தேவைப்படுகின்றன என்று மத்திய அரசுக்கு தோன்றுகிறது.

அதன்படி மேற்சொன்ன அறிவிப்பில் கண்ட நிலங்களை நில எடுப்பு செய்வதற்கு ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அந்த ஆட்சேபனைகளை இவ்வறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 21 நாட்களுக்குள் மேற்படி சட்டம் பிரிவு 3சி(1)ன்கீழ் எழுத்து மூலமாக தாக்கல் செய்யலாம்.

அவ்வாறு எழுத்து மூலமான ஆட்சேபனைகளை தகுதி வாய்ந்த அலுவலரான , மாவட்ட வருவாய் அலுவலர், வேலூர், தமிழ்நாடு அவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு ஆட்சேபனைகளும் விசாரிக்கப்படும். அப்போது ஆட்சேபனை தெரிவிப்போர் நேரிடையாகவோ அல்லது அவர்களது வழக்கறிஞர் மூலமாகவோ தங்களது ஆட்சேபனைகளுக்கு ஆதாரமான ஆவணச் சான்று எதனையும் அளிக்கலாம். அவ்வாட்சேபனைகள் மீது விசாரணைகள் முடிந்தவுடன் அல்லது ஏதேனும் மேற்கொண்டு விசாரணை தேவை என்று மாவட்ட வருவாய் அலுவலர் கருதி விசாரித்த பின்பு மேற்சொன்ன சட்டம் பிரிவு 3சி(2)ன் கீழ் ஆட்சேபனைகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மாவட்ட வருவாய் அலுவலரால் மேற்சொன்ன சட்டம் பிரிவு 3சி(2)ன்கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவே இறுதியானதாகும்.

விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலங்களில் அக்கரையுள்ள நபர்கள் நில எடுப்பு செய்யவுள்ள நிலங்களின் வரைபடங்கள் மற்றும் இதர விவரங்களை வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம் ____________________ அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் நேரில் பார்வையிட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**வேலூர்-09**

## விவர அட்டவணை

தமிழ்நாடு மாநிலம், வேலூர் மாவட்டம், ______ வட்டம் _______கிராமத்தில் _________ இடையில் _______ வழிப் பாதை விரிவாக்கம் செய்ய நில எடுப்பிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காலி இடம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ள நிலங்களின் விவரம்:-

| மாவட்டம்: | | | வட்டம்: | |
|---|---|---|---|---|
| வ.எண். | பு எண். | வகைபாடு | நிலத்தின் தன்மை | பரப்பு ச.மீ-ல் |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |

மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர்-09

ந.க.ஜி4/ மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம்,
வேலூர்-9. நாள்: . . .

## அழைப்பாணை

**பொருள்:** தேசிய நெடுஞ்சாலை – வேலூர் மாவட்டம் - ...................... வட்டம் - ........................... கிராமம் - தேசிய நெடுஞ்சாலை – ________________ அமைக்க நில ஆர்ஜிதம் - சர்வே எண்......................-ல் நில ஆர்ஜிதம் செய்ய இந்திய அரசிதழ் மற்றும் ___________________ நாளிதழில் விளம்பரம் - ஆட்சேபணை தொடர்பாக விசாரணை – சார்பு.

**பார்வை:**
1) இந்திய அரசிதழ் 3ஏ(1) விளம்பரம் நாள்: 01.03.2016
2) ____________ மற்றும் ______________ நாளிதழ் விளம்பரம் 3ஏ(3) நாள்: __________
3) .................................................................................................................................. .......................... கிராமம் என்பவரின் மனு நாள்:
4) தேசிய நெடுஞ்சாலை திட்ட இயக்குநரின் அறிக்கை எண்.................................................... நாள்:

*****

தேசிய நெடுஞ்சாலை ________________ அமைக்கும் பணிக்கு நில எடுப்பு செய்யும் பணி நடந்து வருகிறது. வேலூர் மாவட்டம் ............................... வட்டம், ....................................... கிராமம் சர்வே எண்...............................-ல் நில ஆர்ஜிதம் செய்வது தொடர்பாக 3ஏ(1) அறிவிக்கை இந்திய அரசிதழ் பார்வை 1-ல் கண்டுள்ளவாறு வெளியிடப்பட்டது. இது தொடர்பான 3ஏ(3) அறிவிப்பு ___________ நாளிதழ் மற்றும் ______________ இந்தியா நாளிதழில் 05.05.2016 அன்று விளம்பரம் செய்யப்பட்டது.

2) மேற்படி விளம்பரத்தினை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் ............................................................ சார்பில் வேலூர் மாவட்டம் ...................... வட்டம், .................................. கிராம சர்வே எண்.....................................-ல் நில எடுப்பு செய்வது தொடர்பாக தேசிய நெடுஞ்சாலை சட்டம் 1956 பிரிவு 3C(1)ன்படி ஆட்சேபணை மனு அளிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் பிரிவு 3C(2)ன்படி விசாரணை செய்யவுள்ளதால் .................... காலை 10.00 மணியளவில் _____________________ இயங்கி வரும் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகும்படி ஆட்சேபணைதாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட வருவாய் அலுவலர்
வேலூர்-9.

**பெறுநர்**

1.

2. _____________ தேசிய நெடுஞ்சாலை அதிகாரகம், __________________
(He is requested to attend the enquiry on the date mentioned above, along with remarks on the objection petition filed by the petitioner)

**[TO BE PUBLISHED IN THE GAZETTE OF INDIA, EXTRA ORDINARY, PART-II, SECTION 3, SUB-SECTION (ii)]**

**GOVERNMENT OF INDIA**
**MINISTRY OF ROAD TRANSPORT AND HIGHWAYS**

**NOTIFICATION**

**New Delhi, Dated the ……………………2016.**

S.O. (E) - Whereas, by the Notification of the Government of India in the Ministry of Road Transport and Highways, S.O.633(E), dated 01.03.2016 published in Gazette of India, No.544 Extra-ordinary, Part II, Section 3, sub-section (ii) and issued under sub-section (1) of section 3A of the National Highways Act 1956 (48 of 1956) (herein after referred to as the said Act), the Central Government declared its intention to acquire the lands specified in the Schedule annexed to the said notification for building (construction etc) maintenance, management and operation of ________________ section, in the stretch of land from Design Chainage Km.164/500 to Design Chainage Km.218/280 in the District of Vellore in the State of Tamil Nadu;

And whereas the substance of the said notification has been published in "The Dailythanthi" in Tamil Language and "The Times of India" in English Language both dated 05.05.2016 under sub-section (3) of section 3A of the said Act;

And whereas objections have been received and the same have been considered and disallowed by the competent authority;

And whereas, in pursuance of sub-section (1) of section 3D of the said Act, the competent authority has submitted its report to the Central Government;

Now, therefore, upon receipt of the said report of the competent authority and in exercise of the powers conferred by sub-section (1) of section 3D of the said Act, the Central Government hereby declares that the land specified in the said Schedule should be acquired for the aforesaid purpose;

And further, in pursuance of sub-section (2) of section 3D of the said Act, the Central Government hereby declares that in publication of this notification in the Official Gazette, the land specified in the said Schedule shall vest absolutely in the Central Government, free from all encumbrances.

**Competent Authority &**
**District Revenue Officer,**
**Vellore-9.**

**1, Nelvoy**

| | |
|---|---|
| Name of the Project | For building, maintenance, management and operation of proposed ____________________in the stretch of land from Design Chainage _____________ in the district of Vellore District in the state of Tamil Nadu. |
| Total length | K.m. |
| Date of Award of contract / Appointed Date | |
| No. of Bye-Pass | |
| Competent Authority | District Revenue Officer,<br>Vellore-09. |

**2. STATUS OF LAND ACQUISITION:-**

| Total Land to be acquired (in Sq.mtrs) | 3A | 3D | 3G | Possession | Length available for construction | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**3. STRUCTURES AFFECTED:**

| | Residential | Commercial | Religious | Others | Total |
|---|---|---|---|---|---|
| LHS | | | | | |
| RHS | | | | | |
| **Total** | | | | | |

**4.** ALIGNMENT MAP/STRIP MAP (showing the affected structure / habitation on both sides of the road affected Enclosed**.**

**Competent Authority &**
**District Revenue Officer,**
**Vellore-9.**

## VARIATION CERTIFICATE

**Name of Project:-**

This is to certify that the type and nature of lands pertaining to following Survey Numbers of below mentioned Villages which have been notified in 3A(1) Notification S.O.No.633 dated: 01.03.2016 have been found to vary with respect to the said 3A notification and based on documentary evidence the same has been verified and corrected for publishing in 3D(1) Notification and such deviation has arisen due to non-updation of revenue records.

It is also certified that survey numbers shown with subdivision(s) in proposed 3D notification whereas the same was not shown with subdivision(s) in the related 3A notification already published, such sub-divisions are a true reflection of status of survey numbers and have been done after verification and based on documentary evidence in the matter and has arisen.

The variations are detailed below:

| Sl.No. | Name of the District | Name of the Taluk | Name of the Village | Notified in 3A(1) Notification | | | | To be Notified in 3(D)1 Notification | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Serial Number | Survey Number | Type of Land | Nature of Land | Serial Number | Survey Number | Type of Land | Nature of Land |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** |
| | | | | | | | | | | | |

**Competent Authority &**
**District Revenue Officer,**
**Vellore-9.**

## NOTES OF INSPECTION

Inspected the proposed lands in respect of Revenue Village of ______Village, _________ Taluk now Nemili Taluk, Vellore District for acquisition to _____________ along with Sub-Inspector of Surveyor, Assistant Grade Revenue Inspector and the concerned Village Administrative Officer. The details of trees and permanent structures existing on each survey field covered by the proposals are furnished below.

| **Sl. No.** | **Name of the Village** | **Survey Nos** | **Type of land** | **Nature of land** | **Area in sq.mtrs** | **Structures if any** | **Nature of Crop existing** | **Partly / Fully** |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |

**District Revenue Officer,**
**Vellore-09**

# DIFFERENTIAL STATEMENT

**District: Vellore** **Taluk:** **Village:**

| Survey No. | Area as per 3A | Sy. No. as per 3D | Actual Area Required | Area as per 3D | Excess | Less | Sy. No. as per Excess 3A | Area as per Excess 3A |
|---|---|---|---|---|---|---|---|---|
| (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | |

Competent Authority and
District Revenue Officer,
Vellore-09

**VILLAGE :** **TALUK :-**

| Survey Nos | Chainage | LHS | | | | | RHS | | | | | Grand Total | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Resi dential | Comme rcial | Religi ous | Well & Bore | Total | Resi dential | Comme rcial | Religi ous | Well & Bore | Total | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | TOTAL | | | | | | | | | | | | |

**District Revenue Officer,**
**Vellore-09**

# ROUGH SKETCH SHOWING THE DETAILS OF STRUCTURES REQUIRED TO BE DEMOLISHED

**Name of the project :** For building maintenance management and operation of proposed ______ In the stretch of land from Design Chainage _______ in the district of Vellore in the state of Tamilnadu

**Name of the Taluk :**

**Extend of L.A :**

**Name of the District : VELLORE**

**Name of the Village :**

**Proposed Improve : Formation of Vellore Bye Pass**
**Proposed Land Width :**

**Chainage :**

**LEGEND**

| | | |
|---|---|---|
| **Residential** | **:** | |
| **Commercial** | **:** | |
| **Religious** | **:** | |
| **Others** | **:** | **(Well & Trees)** |

**LHS**

| |
|---|
| **- NIL -** |

**BANGALORE** **RHS** **CHENNAI**

| | |
|---|---|
| 8/3A | 36/9B |
| ○ | ○ |

**District Revenue Officer,**
**Vellore-09**

## GOVERNMENT OF INDIA

## MINISTRY OF ROAD TRANSPORT AND HIGHWAYS NOTIFICATION

## NEW DELHI

*******

**Notification under sub section 3G(3) of National Highways Act 1956 (48 of 1956)**

WHEREAS, the Central Government declared that the Lands situated in the following Villages of Vellore District and specified in the schedule annexed, for the public purpose of building (four-laning etc.,) maintenance, management and operation of proposed __________________ section, on the stretch of land from Design Chainage Km.164/500 to Design Chainage Km.218/280 in the district of Vellore in the State of Tamil Nadu, should be acquired in exercise of powers conferred by sub section (1) of section 3D of the National Highways Act 1956 (48 of 1956) and published in the Government of India Gazette vide S.O. No.576(E) Extraordinary No.513, Part II Section 3, Sub-section (ii) dated:22.02.2017.

In pursuance of sub section 2 of section 3D of the said Act the Central Government hereby declares that the lands specified in the said schedule annexed hereto shall vest absolutely with the Central Government free from all encumbrances from the date of publication of 3D (1) Notification in Official Gazette of India.

All the persons interested (Owners of the land and other interested persons) in the lands specified in the said schedule shall appear in person or by agent, or by legal practitioner before **Competent Authority (LA) & District Revenue Officer, Vellore – 632 009** on the date and time specified in the schedule annexed and submit claims and state nature of the representation/interest on such lands with relevant records.

**SCHEDULE**

| Name of the Village | Name of the Taluk | Enquiry Date | Enquiry Time | Place of Enquiry |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **District: Vellore** | | | | |
| | | | | |

Competent Authority &
District Revenue Officer,
Vellore – 9.

**மத்திய அரசு**

**சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம்,**

**புது டெல்லி**

**அறிவிக்கை**

**1956ஆம் ஆண்டைய தேசிய நெடுஞ்சாலை சட்டத்தின் (48/1956) 3ஜி(3) பிரிவின் கீழான அறிவிக்கை.**

கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதும், வேலூர் மாவட்டம், அட்டவணையில் குறிப்பிட்ட கிராமத்தில் அமைந்துள்ள நிலங்கள் 1956ஆம் வருடத்திய தேசிய நெடுஞ்சாலை சட்டம் (48/1956) 3டி(1) பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டதும் 22.02.2017-ம் நாளிட்ட மத்திய அரசிதழ் எண்.513, எஸ்.ஓ.எண்.576 (ஈ) பாகம்-II பிரிவு 3 உட்பிரிவு (ii)ல் வெளியிடப்பட்டுள்ளதுமான அறிவிக்கைக்கிணங்க ஒரு பொது காரியத்திற்கு அதாவது ______________________ பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவைகளுக்காக தேவைப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது. அதன்படி மேற்சொன்ன அறிவிப்பில் கண்ட நிலங்கள் மேற்சொன்ன பொது காரியத்திற்கு கையகம் செய்யப்பட்டுள்ளன என்றும், மத்திய அரசால் அறிவிக்கப்படுகிறது. ஏனவே, மேற்கண்ட சட்டம் பிரிவு 3டி துணைப் பிரிவு (2)ன் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் அனைத்தும் மத்திய அரசுக்குச் சொந்தமானவையாகும் என்றும், அந்நிலங்களில் எவ்வித தடையுமின்றியும், அந்நிலங்களில் வில்லங்கம் ஏதுமின்றியும், மத்திய அரசின் ஆளுகைக்கு உட்படும் என்றும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

2) நில ஆர்ஜித நிலங்களுக்கு பாத்தியதை உள்ள அனைவரும் தங்களது கோரிக்கைகளையும் (Claims from all persons interested) நிலத்தின் மீதுள்ள உரிமை குறித்த ஆவணச் சான்றுகளையும், கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில், **சத்துவாச்சாரி கிராமம் நில எடுப்பு அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்** முன்பாக, நேரிடையாகவோ அல்லது ஏஜென்ட் மூலமாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ தாக்கல் செய்து, விசாரணைக்கு ஆஜராகும்படி கோரப்படுகிறார்கள்.

அட்டவணை

மாவட்டம்: வேலூர்

| கிராமத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் | விசாரணை தேதி | விசாரணை நேரம் | விசாரணை நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

தகுதி வாய்ந்த அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர்-09